# உ(ன்)பாதை

தமிழாக்கம்

**ம. தூசைநாயகம்**

மன்ஞர்.

வெளியீடு

புனித அன்னம்மாள் கோவில், பங்கு,

செக்கடித் தெரு, கொழும்பு-13

விலை ரூபா. 1-00

நாளாந்தம் சூழலிலே
நொந்திறப்போர் சாயலிலே
தந்தையின் சித்தமென்று
தாரணியை மீட்பதற்கு — தினமும்
தன்னை தருகின்றார் பலியாக எம்பெருமான்.

# நிலை - 1

## இறப்பதற்கு தீர்வையுண்ட இறைவன்

சகோதரர்களே, கடவுளின் மறை பொருளை அறிவிக்க நான் உங்களிடம் வந்தபோது சிறந்த சொல்வன்மையையோ, ஞானத்தையோ காட்டிக்கொள்ளவில்லை ஏனெனில் நான் உங்களிடையே இருந்தபோது இயேசுக் கிறிஸ்துவைத் தவிர, அதுவும் சிலுவையில் அறையுண்ட அவரைத்தவிர வேறெதையும் அறிய விரும்பவில்லை. உங்களோடு இருந்தபோது வலுவற்றவனாய் மிகுந்த அச்ச நடுக்கத்தோடு இருந்தேன். நான் சொன்னதும் அறிவித்ததும் மனித ஞானத்தின் கவர்ச்சியான சொற்களில் அமையவில்லை. ஆவியானவரும் அவரது வல்லமையும் தந்த அத்தாட்சியின்மீது அமைந்தன. உங்கள் விசுவாசம் மனிதர்களின் ஞானத்தில் ஊன்றியிராமல் கடவுளின் வல்லமையிலே ஊன்றியிருக்கவேண்டுமென்றே இவ்வாறாயிற்று. (1.கொரி. 2, 1—5)

இறைவா!

கட்டுப்பாடற்ற பேச்சு
கடினமான போராட்டம் — இப்பொழுது
காலம் கடந்த மௌனம் — நீர் சற்று
மிகையாகவே நடந்து கொண்டீர் — இவை
அத்தனைக்கும் காரணம் அதுதான்
புரிந்து கொண்டிருப்பீர் — நீர்
புத்திசாலியல்ல — நல்லவர்களை
நச்சுப்பாம்பின் குட்டிகள் என்றீர்
— அவர்தம் இதயங்களை
வெள்ளையடித்த கல்லறைகள் என
வெளியரங்கமாய் பகன்றீர் — அது மட்டா

அழுகிய தொழு நோயாளரை அணைத்தீர்
வெறுக்கப்பட்டாரோடு — வேற்று இனத்தாரோடு
வேண்டுமென்றே உரையாடினீர்
பாவிகளோடு பந்தியமர்ந்தீர் -வானகத்தில் முதலிடம்
வழிப்போக்கருக்கு என்றீர்
இல் அற்றோர், ஏழைகள், முடவர்கள்
எல்லோரும் உமக்கு நண்பரீ
வேத சட்டங்களை வெறுத்து ஒதுக்கினீர்
கடினமான கட்டளைகளின்
கருத்தினையே சுருக்கி
அன்பு என்று அதற்குப் பொருள் கொடுத்தீர்
அதன் பயன் அவையெல்லாம் உம்மை
பழிவாங்கப்படை யெடுக்கின்றன — தம்
அதிகாரிகளின் துணையுடன்
அமர்புரிய ஆரம்பித்துவிட்டன — அவற்றின்
தொல்லைகள் தொடர்கின்றன

இறைவா!

அற்பமெனினும் அடியேன் உம்
அடியதனைத் தொடர வந்தால்
அஞ்சுகிறேன் — அதன் அர்த்தம் —
ஏற்கனவே எடுத்தெறியப்பட்டுவிட்டேன்

இறைவா!

சிலர் — நகைப்பார், நையாண்டி செய்வார்
பலர் — பழிப்பார், பரிகசிப்பார் பெரும்பாலும்
நண்பர்களும் நழுவிடுவர்
இவற்றை இழக்க இதயம் மறுக்கிறது — நான்
மனித சித்தாந்தத்திற்கு மயங்கி
அஞ்சுகிறேன் — ஆனால்
வார்த்தையின்படியே வாழுவது கடினம்
எதிரியோடு இணைவதைவிட இது நல்லது —
முன்னேறு — மெல்ல மெல்ல முன்னேறு என்று

குரலொன்று என் காதில் ஒலிக்கிறது — இறைவா என்
புத்திக்கும் இப்போது புரிகிறது — நீர்
புரிந்தவை பிழையல்ல

இறைவா!

அவமானத்தின் சிலுவையை
அந்தம் வரை சுமந்துவர.
நற்செய்தி வழியே நடக்க, நல்ல
போராட போதிய பெலனைத் தாரும்.



## நிலை - 2

### சுமை தாங்கும் சுதன்

என்னைப் பின்செல்ல விரும்புகிறவன், தன்னையே மறுத்துத் தன் சிலுவையை நாள் தோறும் சுமந்து கொண்டு என்னைப் பின் தொடரட்டும். ஏனெனில் தன் உயிரைக் காத்துக்கொள்ள விரும்புகிறவன் அதை இழந்துவிடுவான் என் பொருட்டு தன் உயிரை இழப்பவனே அதைக் காத்துக்கொள்வான்:. (லூக். 9: 23-24)

இறைவா!

இதோ உன் சிலுவை
உனக்கென்றோர் சிலுவை இருந்திட்டால்தானே
உனது சிலுவை அதுவென்று ஆகும்
சிலுவையே இல்லாத சிவகா
ஏற்றீரோ எம் சிலுவைப்பழுவை
பாழும் பாரகத்தின் பாவப்பழுக்களை
பரமனே உம்மீது ஒவ்வொன்றாய் ஏற்று
கழுச்சுமந்து கல்வாரி வழிநடந்து
வாழ்க்கையின் மூலம் வழிசமைத்த வள்ளலே
நீர் இன்னும் நீண்ட தொலைபோக வேண்டும்
உடல்வலிய உபாதை பெறவேண்டும்
கழுமரத்தை காவியே ஆகவேண்டும்

இறைவா!

சத்தமின்றி நடக்கின்ற சத்தியனே — உண்மையிலே
கதைப்பதற்கென்று ஒரு காலமும்
அமைதிக்கென்று ஒரு அவகாசமும் உண்டா

பாவங்கள் ஒன்றையொன்று பகைப்பதற்கும்
அசைவின்றி அமைதியைப் பேணுதற்கும்
அதற்கென்றோர் நேரமுண்டா? பதில் பகரும்

இறைவா!

எனது,
புயங்கொண்ட சிலுவையின் சுமையெல்லாம்
பூவுலகில் நான் பெற்ற துன்பமாய்
யான் பெற்ற வளர்ச்சி உயர்ச்சி
யாவும் இதுவாகக் காண்கின்றேன்
இது எனக்குப் பெருஞ்சுமை—என்றாலும் இச்சுமையை
ஏற்று வழி நடக்க என் இறைவா துணைவாராய்

என் இறைவா!

ஆடம்பரங்களிலே அர்த்தமில்லை
வெறுமையே விமோசனத்தின் வழி
அமைதியே ஆட்கொள்ளும் சக்தி
என்பதை அறிந்து கொள்ள
ஆண்டவனே அருள் செய்வீர்.
தூக்கிய சிலுவையுடன் — இன்னும் நான்
தொலை நடக்கவேண்டும் என நீர் இசைந்தால்
நாளாந்தம் உதயத்தில்
சுமை தாங்கும் வல்லமையை — இறைவா
முன்கூட்டியே தந்தருளும்.



# நிலை - 3

## விழுந்து விட்ட விமலன்

இயேசு அவர்களைப் பார்த்து (சீமோனும், சீமோன் சகோதரன் பெலவேந்திரரும்) "என் பின்னே வாருங்கள் நீங்கள் மனிதரைப் பிடிப்பவராய் இருக்கச் செய்வேன்" என்றார். அவர்கள் உடனே அவர்கள் வலைகளை விட்டுவிட்டு அவரைப் பின் சென்றனர். (மார்க். 1:17-18)

அதற்கு இயேசு "நீங்கள் (யாகப்பரும், அருளப்பரும்) கேட்பது என்னவென்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் கிண்ணத்தில் நீங்களும் குடிக்க முடியுமா? நான் பெறும் ஞானஸ்நானத்தை நீங்களும் பெற முடியுமா?" "முடியும்" என்றனர். அதற்கு இயேசு "நான் குடிக்கும் கிண்ணத்தில் குடிப்பீர்கள் நான் பெறும் ஞானஸ்நானத்தையும் பெறுவீர்கள்." (மார்க். 10: 38-39)

இராயப்பரையும், யாகப்பரையும், அருளப்பரையும் தம்மோடு அழைத்துச்சென்றார். அப்போது திகிலும் மனக்கலக்கமும் அவரை ஆட்கொள்ளவே... பின்பு வந்து அவர்கள் தூங்கிக்கொண்டிருப்பதைக் கண்டு, இராயப்பரை நோக்கி "சீமோனே தூங்குகிறாயா? ஒரு மணி நேரம் விழித்திருக்க உன்னால் முடியவில்லையா?"

(மார்க். 14: 33-57

விழுந்துவிட்டார் — ஒரு கணைந்தான்
தடுமாறி தரை விழுந்தார்
புழுதியிலே இறைவன் — என்னிறைவா
உனைத் தொடர்ந்து விழுவதற்கு — நானும்

உளம் துணிந்து நிற்கின்றேன்
பிரிப்பதற்கு முடியாது — நான் உம்மில்
பிணைந்துவிட்டேன் என்றேதான் நினைக்கின்றேன்
— ஆனாலும்
வழியினிலே மலர்ந்துள்ள மலரொன்றின் மங்கிவிட்ட
வனப்பிதழில் என் மனதைப் பறிகொடுத்தேன்

இறைவா!

கடந்து வரும் வழியெல்லாம் கடும்குழிகள் — அத்தோடு
களைக்கிறது. கழுமரமும் அழுத்து தென்னை
தொடர்ந்து வரும் துன்பத்தை
துணிந்தெதிர்த்துப் போராட —
இடர் நடுவே தன் சுமையை
இழுப்பதற்கு முடியாது
இன்னலுறும் மானிடர்க்கு
இயன்றளவு உதவிடவே
இயலாத தன்மையிலே இருக்கின்றேன் என் இறைவா

இறைவா!

உம்மைத் தொடர்வதற்கு மட்டுமல்ல
உம்மில் நிலைத்திருக்க உதவிடுவீர் — நீர்
செப்பனிடும் செகத்தினிலே சேர்ந்துள்ள
செயற்கையிலும் வெறுமையிலும் மனமிழக்கும்
பலவீனம் எனைப்பற்றி ஆண்டிடாது
பார்த்தருளும் காத்தருளும் பரம்பொருளே.

# நிலை - 4

## தாய் முகம் நோக்கும் தனயன்

உமது உள்ளத்தையும் ஒருவாள் ஊடுருவும்
(லூக் - 2: 35)

இரங்குகின்றேன் இறைவா!
ஈன்ற நின் அன்னைக் காய்!
தொடர்கின்றாள், உம்மைத்தொடர்கின்றாள்—அவள்
வையகத்தின் சிலுவை வழியதனைத்தொடர்கின்றாள்
அங்குள்ள கும்பலிலே அறிமுகமற்றவளாய்
ஆனாலும் உனை விட்டு அகற்றாத விழியினளாய்
அவள் பயணம் தொடர்கிறது.
நீ பட்ட பாடுகள் அவள் பட்ட பாடுகள்!
நின் ஏக்கமூச்சு அவள் விட்ட மூச்சு!
நீ பட்ட அடிகள் அவள் பட்ட அடிகள்!
நீ கொண்ட காயம் அவள் கொண்ட காயம்—அவள்
இதயத்தே இவையெல்லாம் தாங்கி— உன்
இடரெல்லாம் தன் நெஞ்சில் வாங்கி—உன்
துயராலே வழி நீளம் ஏங்கி—தொடர்கின்றாள்.

பேச்சென்று எதுவுமில்லை—
பெற்றெடுத்த தன் மகவை தொடவுமில்லை—
ஆனால் தொடர்கின்றாள்—அதன் மூலம்
இரட்சிப் பின் பாதையில் உன்னோடு இணைந்துவிட்டாள்

என் இறைவா!

கூட்டத்தில் ஒருவனாய் நானும் கலக்கின்றேன்
கூடவே அவர் சிலுவை வழியில் நடக்கின்றேன்—ஆனால்

உலகியலின் துன்பத்தின் உபாதையால் நசுங்குகின்
றேன்
இரட்சிப்பில் எனக்குள்ள இயலாமை தெரிகிறது
—ஏனென்றால்.
உலகின் பாதையினை உற்றுநோக்குகிறேன்—அங்கு நான்
காண்பதெல்லாம் கடுந்தரையே
எத்தனையோ வளைவுகள், ஏற்றங்கள், இறக்கங்கள்
அசுத்தங்கள், அழுக்குகள், அநீதிகள்—திகைக்கின்றேன்
இந்நிலையில் என் இறைவா!
அன்னை மரி வழியை அடியேனுக்களித்தருளும்-இந்த வழி
மானிடனின் பார்வையிலே மதிப்பற்று, பலனற்று,
—பயனற்று
தோன்றிடினும் இறைவன் பார்வையிலே
ஒன்றிணைந்த மீட்புக்கு இன்றியமையாததிது

இறைவா நான்—

மக்கள் மத்தியில் நடமாடதுணைவாராய்
மற்றுமவர்—மனத்துயரை, மாசுகளை
உணர்ந்து உதவிடவே உற்ற துணையாவாய்
இந்நிலையில் என் இறைவா! உனைவிட்டு
அகற்றமுடியுமா அடியேனின் பார்வைதனை?
அன்னையோடு கூட அல்லல்களை வரவேற்க
அஞ்சிப்பயந் தெனது இதயத்தை மூடுவதா?
அவளோடு அனுபவிப்பேன்—பரிகாரம் தேடிடுவேன்.

## நிலை - 5

## சீமோனின் சிற்றுதவி

அவரைச் சிலுவையில் அறைய வெளியே கூட்டிச் சென்றார்கள். சிரேனே ஊரானாகிய சீமோன் என்னும் ஒருவன் நாட்டுப்புறத்திலிருந்து அவ்வழியே வந்து கொண்டிருந்தான். (மாற்கு-20:21)

ஒருவருடைய சுமைகளைத்தாங்கிக்கொள்ளுங்கள் இவ்வாறு கிறிஸ்துவின் சட்டத்தை நிறைவேற்றுவீர்கள். (கலாத் 6:2)

வீதியிலே சென்றவனைப் பிடித்து—உதவு என
பலவந்தப் படுத்துகிறார்
ஆறுதலைப் பெறுவதற்கு
ஆண்டவரே முதன் முதலில்
அறியாத புதியவனைத் தேர்ந்தெடுத்தீர்
அவன் துணையை ஆதரித்தீர்
உன் பரிவின் உதவியினை நாடவில்லை—அவர்
நல்கும் ஆறுதலை தேடவில்லை—அவர்
இரங்குவரா என்றேனும் ஏங்கவில்லை
பழக்கமில்லா புதுமுகத்தான்
பலவந்தமாயுதவ
பணித்ததையே பரம்பொருளே தெரிவு செய்தீர்
அனைத்து வல்லமையை ஆட்கொண்ட இறைவா—நீர்
அற்ப மானிடனின் ஆறுதலைத் தெரிந்துள்ளீர்
உமக்கெம்மை துணையாகத் தேடவில்லை
எமக்கும்மை துணையாத் தருவதற்கே
என்பதையே இதன் மூலம் விளக்கியுள்ளீர்.

இறைவா! எனக்கு மறற வரும் வேண்டும்
மானிட வழிப்பயணம் மிகக்கடினம்
தடுமாற்றம் நிறைந்துள்ள தனிப்பயணம் —ஆனால்
ஆதரவு நல்கிடவே அகல விரிந்திருந்த
அன்புக் கரங்களினை அவமதித்து புறக்கணித்தேன்
இப்பொழுது நான்
தனித் இயங்கவேண்டியுள்ளேன்
தனித்தே போராடவேண்டியுள்ளேன்—போராடி
தனித்தே வெற்றிபெற வேண்டியுள்ளேன்.
இன்னும் என் பக்கத்தே
நடந்து கொண்டிருக்கின்ற நண்பர்கள்
துணைவர்கள், சோதரர்கள்
அயலவர்கள், ஊழியர்கள்
அனைவரையும் எனக்கருகே வைத்துள்ளீர்
அவர்களை நான் அசட்டை செய்தேன்
ஆனால் அவரோடு ஒன்றிணைந்தால்
ஆஇரைக்கு மீட்புண்டு

என் இறைவா!

இவரெல்லாம் என் வழியில் சிமோன்கள்—அவர்கள்
இறைஞ்சி நின்றால்
அவர் துணையைக்காண—அவர்களினை ஏற்க
அனுக்கிரகம் செய்தருளும் ஆண்டவரே.

# நிலை - 6

## பரமன்முகம் துடைத்த பாவை

இயேசுவின் வாழ்வு எங்கள் உடலில் வெளிப்படும் படி போகுமிடமெல்லால் இயேசுவின் மரணப் பாடு களைத் தாங்கிச்செல்கிறோம் (2 கொரி 4:10)

இப்பொழுது கண்ணாடியில் மங்கலாகக் காண்கின் றோம் அப்பொழுது முகம் முகமாய்க் காண்போம் இப் பொழுது அரைகுறையாய் அறிகிறேன் அப்பொழுது கடவுள் என்னை அறிவதுபோல் நானும் அறிவேன். (1கொரி 13:12)

நீண்ட மணிநேரம் —அவள் விழிகள்
நிலைத்திருந்ததுன் மீது—ஐயனே
நின் துயரை அவளுந்தான் அனுபவித்தாள்
தொடர்ந்தோ உன் துயரை
தாங்கவொணாத் தையலவள்
தள்ளிவிட்டாள் வீரர்களை ஒருபுறத்தே
தயங்காது முன்வந்து
துல்லிய துணி யொன்றால்
துடைக்கிறாள் நின் முகத்தை
துடைத்திட்ட துணிமீதா
உகுத்திட்ட உதிரத்தால்
உருவத்தைப் பதித்திட்டாய்!—உண்மை, அவள்
உள்ளிருக்கும் இதயத்தில்
உருவத்தைப்பொறித்திட்டாய்.

இறைவா!

உயர் நிலையில் உனைவைத்து
நோக்கத்தான் நினைக்கின்றேன்-ஆனாலும் என்னுள்ளம்
அன்புடை சிறுதம்பி அண்ணனை வைக்கின்ற
அந்தஸ்த்தில் வைத்திடவே விழைகிறது
உன் உருவில் நான்வாழ விரும்புகிறேன்—முதலில்

உம்முகத்தை நான்காணும் அருள்வேண்டும்
நீர் நினைத்தால்
உயிர் நண்பர் ஒன்றிணைதல்போல — சிறிதேனும்
உனைப்போன்று நான்வருதல்கூடும் — ஆனால்
என் ஆண்டவனே!
அடிக்கடி நான்உன்னை கடந்து போயுள்ளேன்
— ஆனால் உம்மீது
அவதானமற்றவனாய் நடந்துள்ளேன் — சிலவேளை
நின்று நினைப்பார்த்து சலிப்புற்றேன்
அடுத்தவரின் மட்டில்லே ஐயனே
பரிகசிப் புக்குள்ளான பாவிநான்

இச்சைதனை வேண்டுகின்ற என்னுடலை மன்னிப்பாய்
இல்லையெனில் என்இறைவா இதில் மற்றோர்
உன் உருவைக் காணுவதோ முடியாது!
மாயையெனும் மேகத்தால் மறையுண்ட என்கண்ணை
மன்னிப்பாய் என் இறைவா — இல்லையெனில்
மற்றவர்கள் இக்கண்ணில் நின் ஒளியைக் கண்டிடவோ
முடியாது:
அலைபாயும் என்னுடைய இதயத்தை
ஆண்டவனே மன்னிப்பீர் அல்லது
அடுத்தவர் உன் அன்பை இதிற்காண இயலாது
இருந்தாலும் என் இறைவா! — வருக
வரவேற்கத் திறந்துவிட்டேன் என் இதயக்கதவை.

# நிலை - 7

## இரண்டாம் முறை விழ்ந்த இறைவன்

எல்லோரும் தூங்கிவிழுந்து, உறங்கிவிட்டார்கள்
(மத்-25 : 5)

களியாட்டத்தாலும், குடிவெறியாலும் உலகக் கவலையாலும் உங்கள் உள்ளங்கள் மந்தமடையாதபடியும், அந்தநாள் கண்ணிபோல் உங்களை சிக்கவைக்காதபடியும், எச்சரிக்கையாய் இருங்கள். ஏனெனில் மண்ணுலகெங்கும் வாழும் அனைவர்மேலும் அந்தநாள் வந்துவிடியும். நிகழப்போகும் அனைத்திலும் தப்பித்துக் கொண்டு மனுமகன் முன்னிற்க நீங்கள் வலிமையுள்ளவர்களாய் இருக்கும்படி எந்நேரமும் செபித்துவிழிப்பாயிருங்கள்" (லூக் 21 : 34-36)

இளைத்துவிட்டீர் இறைவா!
மறுபடியும் மண்மடியில் வீழ்ந்துவிட்டீர் — இம்முறை
களைப்பிலும், இளைப்பிலும் கழுமரப்பழுவிலும்
தளர்ந்து தரைமீது விழுந்தனையோ?
அடுத்தடுத்து வருகின்ற அல்லல்கள்
அகவலியை மழுங்கிடச் செய்தனவோ!

இறைவா!

பாவத்தால் மழுங்கிய தென்மனச் சாட்சி
இன்பமெனும் மாயைக்குள்
இலகுவிலே வீழ்கின்றேன்
இங்கு சில பற்றுக்கள் அங்கு சில சந்தேகம்
புத்திக்கு எட்டாத புதுமைகள் - இவையாவும்
காட்சிகளை மறைக்க கருமிருட்டில் நிற்கிறேன்-இதனால்

தடுத்து நிற்கும் தடைகள் — என்வழியில்
தவித்து நிற்கும் மனிதர் — எதையுமே
இனங்காண முடியாது இருக்கிறேன்—என்
செவிப் புலனின் செயற்பாடு படிப்படியாய் குறைகிறது
—அதனால்
குறையுரைப்போர் குரல் கேட்கமுடியாது இருக்கின்றேன்
பாதை ஒன்றை நீர் அமைத்தீர் பாவினனக்கென்று
விலகிவிட்டேன் வீதியினை — இப்பொழுது
வெறுந்தரையில் வீழ்ந்து விட்டேன்.

இறைவா

வரமொன்று கேட்கின்றேன் வழங்கிடுவீர் — நான்
இயற்றுகின்ற கருமத்தில் இளமையினைத் தந்தருளும்
அடிமைத்தனத்தினிலே அமைதிகொண்டு
அழிவிற்கு வழிகோலும் என் செயலை
ஆண்டவரே மன்னிப்பீர்.

# நிலை - 8

## அழுகின்ற அரிவையர்கள்

உன் கண்ணிலே உள்ள விட்டத்தைக் கவனியாது உன்சகோதரன் கண்ணிலுள்ள துரும்பைப் பார்ப்பதேன் உன்கண்ணில் உள்ள விட்டத்தைப் பார்க்காத நீ, உன் சகோதரனை நோக்கி 'தம்பி உன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுக்கவிடு' என்று எப்படிச் சொல்லலாம்? வெளிவேடக்காரனே, முதலில் உன்கண்ணிலிருந்து விட்டத்தைஎடுத்தெறி பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கும் துரும்பைப்பார். (லூக். 6 : 41—42.)

அவர்கள் அழுகின்றார்
வேதனையால் விம்முகின்றார்
உற்றுணர்ந்து கவனித்தால்
உணர்ந்திடலாம் இவர் செய்கை—அவர்கள்
சக்தியற்றோர்—தலையிடவும் முடியாத
உரிமையற்றோர்—அதனாலே
விம்முகிறார், உருகி விம்முகிறார்;

இறைவா நீர்!

அவர்களைப்பார்க்கிறீர்
அழுகுரலை கேட்கிறீர்
ஆனாலும் உரைக்கிறீர்
அழுதிடுவீர் உம்பிழைக்காக.

இறைவா இவ்வுலகின்,

துயர்களையும்—துயர் சுயும் வினைவுகளையும்
துணிவோடு வென்றிடுவேன்—ஆறுதல்

என்பிழைக்காய் அழுவது
இருக்கட்டும் ஒருபக்கம்
அடுத்தவரை நான் எண்ணி அதிகமாய் அழுகிறேன்
இது இலகு, இது எனக்கு கைவந்த கலைகூட
உலகம் என் முன்னால் உருள்கிறது
நீதியின் இருக்கையில் நின்றுலகைப் பார்க்கிறேன்.
அரசியலில், பொருளியலில், மதுவினிலே,
சேரியில், திரைப்படத்தில்
அங் கெல்லாம் பல குறைகள்—
தான் தோன்றிக் கிறிஸ்தவர்கள்
பகுத்துணராப் பாதிரிமார்—இவைபோன்ற
எத்தனையோ மனிதர்களை மக்களிடை காணுகிறேன்

என் இறைவா!

என்னைத்தவிர—எல்லோரும்
எல்லோரையுமிட்டே எண்ணுகின்றார்
உலகினைப்பற்றியே உள்ளுகின்றார்
இவ்வேளை என் இறைவா—
நான் பாவி—இதை எனக்கு உணர்த்திவிடு.



## நிலை - 9

## மூன்றும் முறை விழுந்த முதல்வன்

இயேசு அவரிடம் (இராயப்பர்) உறுதியாக உனக்குச் சொல்லுகிறேன்! இன்றிரவே கோழி கூவுமுன் என்னை மும்முறை மறுதலிப்பாய். (மத். 26 : 34)


"என்னை நேசிக்கிறாயா?" என்று அவர் மூன்றும் முறையாகக் கேட்டதால் இராயப்பர் மனம் வருந்தி இயேசுவை நோக்கி ஆண்டவரே, உமக்கு எல்லாம் தெரியுமே. நான் உம்மை நேசிக்கிறேன் என்பது உமக்குத் தெரியும் என்றார். (அரு. 21 : 17)

மீண்டும் மண்மிசை
அடிக்கின்றார் வீரர். அசைவின்றிக்கிடக்கின்றீர்
இறைவா இறந்தா விட்டீர்?—இல்லை ஆனால்
இளைத்து விட்டீர் முற்றாக—கணப் பொழுது
விசித்திரமான தொரு வேட்கை—ஆனால்
மறுபடியும் தொடர்கின்றீர்—இறைவா
அடிமேல் அடிவைத்து அசைகின்றீர்.

இறைவா!

மும்முறை விழுந்திட்டீர்—ஆனால்
இம்முறை கல்வாரிக்கண்மையிலே
நான் வீழ்ந்தேன்—மீண்டும் பலதடவை—ஆனால்
வீழ்ந்த நான் எழவில்லை—இறைவா
முன்பே நான் மொழிந்தது போல்
மன்னிப்பீர் மனித னென்னை—உமக்கு
என்மீது உரிமையுண்டு—என்

விசுவாச நெஞ்சத்தை—உம்
விருப்பம் போல் சோதிக்க—நான்
தளர்ந்து விட்டால் தவறிவிடுவேன்
பொருதி நின்றால் பிழைத்திடுவேன்—நான் உமக்காக
மூன்றாம் முறை விழுந்தேன்—நீரோ
முன்னேறி விட்டீர் கல்வாரி நோக்கி.



# நிலை - 10

## ஆடையை இழந்த அமலன்

"மனுமகன் மகிமை பெறும் நேரம் வந்து விட்டது உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன் கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தாலொழிய அது அப்படியே இருக்கும். மடிந்தால்தான் மிகுந்த பலன் அளிக்கும். (அரு. 12 : 23—24.)

இழப்பதற்கென்று எதுவுமே இல்லாத இறைவா!
இறுதியில் நீ இழந்து நிற்பது உனது அங்கியை
தாய் நெய்த மேலங்கி—இதனை
தரித்திருந்தாய் ஆவலுடன்—ஆனால் அதையும்
இழக்கவேண்டி இருந்தது—இழந்தாச்சு
இழந்து நிற்கும் உனக்கு
இழக்க முடியாதது ஒன்றுதான்
இறைவா! அது நின் சிலுவை—இப்பொழுது,
ஏற்றுள்ள சிலுவைக்கும் உனக்கும் இடையே
தடை எதுவும் கிடையாது—சிலுவையொடு
ஒன்றிக்கப் போகின்றாய்—இதன் மூலம்
இவ்வுலகை இரட்சிக்கப் போகின்றாய்—எனவே.

என் இறைவா!

உன்னிடமிருந்து என்னை மறைக்கும் கண்ணிகளை
உதறிவிடுகின்றேன்
என்னிடத்தில் இவையிருப்பின், மற்றவர்
தம்மிடத்தே இருந்தென்னை பிரித்து விடும்

என் இறைவா! உம்முடைய

சித்தத்திற் கொவ்வாத இவையெல்லாம்
சிறிது சிறிதாக அழியட்டும் என்னைவிட்டு
அழிவிற்கு வித்தான இவற்றை யெல்லாம்
அறவே நான் வெறுக்கின்றேன்—நீர்
எப்படி எதைக்கேட்பினும்
அப்படியே அதைத்தருவேன்
ஆனால் நீர் கேட்பதோ அதிகம். அற்பமான சிலவற்றை
அகத்தே வைத்துள்ளேன் அவை யென்னை
அர்ப்பணிக்கத் தடையாக
ஆட்கொண்டு நிற்கின்றன.
ஆனாலும் இறைவா! நீ விழைந்தால்
அவற்றையும் அப்படியே எடுத்தருளும்—என்னுடைய
கடைசி ஆடைவரை களைந்து எடும்—
வாழ்ந்திட்டபயனை நான் பெறவேண்டின்
இறந்திடவே வேண்டும்
வித்து அழிந்தாற்றான்
விளையும் பொற்கதிர்கள் என நான் அறிவேன்.



# நிலை - 11

## சிலுவையில் அறையுண்ட சீவகன்

கடவுளுக்கென்று வாழும்படி நான் சட்டத்தின் செயலால் சட்டத்தைப் பொறுத்தமட்டில் இறந்தவன் ஆனேன். கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன்; இனி, வாழ்பவன் நானல்ல; என்னில் வாழ்பவர் கிறிஸ்துவே இப்போது ஊனுடலோடு நான் வாழ்வது கடவுளின் மகன்மேல் உள்ள விசுவாசத்தின் வாழ்வாகும். இவரே என்மேல் அன்பு கூர்ந்தார் எனக்காகத் தம்மையே கையளித்தார். (கலா. 2 : 19—20)

இறைவா! அங்கே—

நீட்டி நிமிர்ந்து விட்டீர் நீளச் சிலுவையிலே
உனக்கென்றே சமைத்ததிது சந்தேகம் ஏதுமில்லை
அதன் பரப்பில் நீ நிறைந்தாய்
அதனோடு பூரணமாய் ஒருங்கிணைந்தாய்
மனிதா நீ மனம் போல அறைக என்று
மனுமகனே மனமொப்பி அனுமதித்தாய்

இறைவா!

என் ஊழியது போலவே எல்லாம் முடிந்திற்று இப்போது
இயந்திரம் ஒன்றினை இணைப்பவன் வரைபடத்தில்
இருக்கின்ற படியதனை இணைத்ததுபோல்
சிலுவை மரத்துடனே சேர்ந்து பொருந்திவிட்டீர்
இது மிகவும் நுட்பமானதோர் அமைப்பு
எனவே என் இறைவா இக்கணமே
என் உடல், என் ஆவி, என் இதயம்

அனைத்தையுமே சிலுவையிலே கிடத்திவிட்டேன்
எனதுயரை அனுபவிக்க.
எனக்கென்றோர் சிலுவையினை தேர்ந்தெடுக்க
எந்தனுக்கு உரிமையில்லை
ஆனந்த மாயிற்று, எனக்கென்று
அளந்து அமைத்திட்ட சிலுவை
நாளாந்தம் நகருகிற நிமிடமெல்லாம்
நீயிதனை எனக்களித் திடுகின்றாய்
நான் துயில வேண்டு மிதில்.
இது இலகுவான தொன்றல்ல.
கட்டுண்டு விட்டேன்—எனைச்சுற்றி
அசைவதற்கு இடமில்லை—என் இறைவா
அதை விட்டால் வேறிடத்தே—நான்
உனைக்காண முடியாதே
அங்கேதான் எனைக்காத்து நீ இருப்பாய்—அங்கு
ஒன்றிணைந்தெம் சோதரரை இரட்சிப்போம்.

# நிலை - 12

## உயிர் நீத்தார் உலக மீட்பர்

ஆனால், தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் தன்மை பூண்டு மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி தம்மைத் தாழ்த்தி சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்கும் கீழ்ப் படிபவரானார். (பிலிப். 2 : 7—8)

ஆகவே தாமும் நம்முடைய சகோதரர்களுக்காக நம் உயிரைக் கொடுக்கவேண்டும். (அரு. 3 : 16)

இன்னுமிருப்பதோ சில மணிகள்
இன்னும் சில மணித்துளிகள்
இறுதியிற் சில கணங்கள்
முப்பத்து மூன்றாண்டு முன் நடந்து போயிற்று
முப்பத்து மூன்றாண்டும் கணம் கணமாய் கழிந்திற்று
தப்புதற்கு முடியாத தருணமிது
இப்பொழுது நிற்குமிடம்
வாழ்க்கையின் அந்தத்தில்
வழிமுடியும் எல்லையில்
செங்குத்துப்பாறையான
சீவியத்தின் விளிம்பில்
இறுதி அடியை எடுத்து வையும்—அன்பின்
அறுதி அடியை எடுத்து வையும்
வாழ்க்கையில் இறுதியடி
மரணத்தில் முடிவடையும்
நீர் தயங்குகிறீர்.
மூன்று மணிகாலம்—மும்மணி உபாதை—இது

மூன்றாண்டு வாழ்வைவிட நெடிது—இது
முப்பதாண்டு வாழ்வைவிட கொடிது.

இறைவா!

உமைச் சூழ உள்ளவைகள்
எல்லாமே ஆயத்தம்—இப்பொழுது வேண்டியது
உம்முடைய தீர்மானம்
அங்கு உமது சிலுவையிலே
அசைவற்று நிற்கின்றீர்.
உமக் கென்று உருவான சிலுவை—அந்த
கழுமரத்தை அணைப்பதனைத் தவிர—மற்ற
கருமமெல்லாம் கைவிடுத்தீர்.
அறையுண்ட நின்னுடலின்
ஆவியின்னும் அகலவில்லை.
அழிகின்ற மாமிசத்தை அழியவிட்டு
அழியாத வாழ்வினுக்கு வழிசமைப்பீர்

இப்பொழுது,

அங்கம் முழுவதையும் ஆட்கொண்ட உயிரணுக்கள்
அணுவணுவாய் அகன்று அவை,
அடித்துக் கொண்டிருக்கும் இதயத்தில்
அடைக்கலம் தேடி வருகின்றன
அளவிட முடியாத இதயம்
நிறைந்து வழிகின்ற நெஞ்சம்
பாவமும், தீமையும் பலுகியதால்
பாரமாய் இருக்கின்ற பாரகம் போல்
இதயம் இப்பொழுது கனக்கிறது.

இறைவா,

இன்னும் ஒரே ஒரு முயற்சி—அதோ
இரட்சகரை அறியாத மனுக்குலம்
இன்னும் உனைக்காத்து அழுகிறது—உமது
ஆதரவை வேண்டுகிறார்
சோதரர்கள் அங்கே.
நீட்டிய கரத்தோடு நின்றதந்தை—உன்னை
வளைந்து, வரவேற்று நிற்கின்றார்
எமைக்காரும் இறைவா, எமைக்காரும்.

யாரும்—

கனக்கின்ற இதயத்தை அவரெடுத்து
மெதுவாக—மிக முயன்று—தனியாக
பூமிக்கும், வானுக்கும் நடுவினிலே
பக்தியும், பயமும் கலந்த இரவில்
உணர்ச்சி வசப்பட்ட அன்பில்
உலகின் பாவத்தை ஒரு சேர்த்து—தன்
உயிரை யெலாம் ஒன்றாக்கி
உரக்க அழுது அனைத்தையும்
ஒப்படைத்து உரைக்கின்றார்
"பிதாவே என் ஆன்மாவை உமது கரங்களில்
ஒப்படைக்கிறேன்"
இயேசு இரட்சகர் எமக்காக இறந்து விட்டார்

இறைவா!

உமக்காக நானிறக்க உதவும்
அவர்க்காக நானிறக்க உதவும்.

# நிலை - 13

## தாய் மடியில் தனயன்

அவருடைய தாய் அவரைப்பார்த்து "மகனே, ஏன் எங்களுக்கு இப்படிச் செய்து விட்டாய்? இதோ உன் தந்தையும் நானும் உன்னை ஏக்கத்தோடு தேடிக்கொண்டிருந்தோம்!" என்றாள். அதற்கு அவர் "ஏன் என்னைத் தேடினீர்கள்? என் தந்தையின் இல்லத்தில் நான் இருக்க வேண்டுமென்பது உங்களுக்குத் தெரியாதா?" என்றார்.

(லூக். 2 : 48—49.)

கடமை முடிந்தது—கழுவை விட்டிறங்கும்
கிழிறங்கி ஓய்வெடுப்பீர்—கிடைத்தது ஆதாயம்
கடுமுழைப்பால் களைப்படைந்து
கண்ணுறங்கல் போல—கண்மூடிக் கிடக்கின்றீர்
அன்னையுமை அன்போடு அரவணைத்து ஏந்துகிறாள்
இனைத்தே இறந்துவிட்டீர் இயக்கமின்றிக்கிடக்கின்றீர்
என்னே உமது நிலை!
இத்தகைய நிலையினை உம் தந்தை—
உம்மிடம் எதிர்பார்க்கவில்லையன்றோ.
சமாதானத்தில் இளைப்பாறும்—அனைத்தும்
நிறைவேற்றி முடித்திட்ட நிம்மதி.
அமைதி—சாந்தி—மகிழ்வு—இவை
அலைபாயும் நின் வதனம்.

பெற்றவளைப் பெருந்துயரில் நீர் விடுத்தீர்.
—அவளுக்கோ அதையிட்டு
பெருமையும் பெருமகிழ்வும்.
கண்ணுறங்காய் கண்மணியே—கன்றவளின்
கவனமெல்லாம் இப்பொழுது உன்மீது.

நாளாந்தம் இரவினிலே நித்திரையில் வீழ்கையிலே
நான் வாழ்வை முடிக்கின்றேன்—ஆனால் ஐயகோ!
அழுக்கடைந்து—அலுப்படைந்து
தந்தைக்குப் பணிபுரிய திறனின்றி தவிக்கின்றேன்.
அன்னை மரியாளே அருமை மகன்போன்று
அடியேன் எந்தனுக்கும்—
துயில்கின்ற வேளையில் துணையாக நிற்பீரோ
தோல்வியால் என்னுடல் துவண்டு விழுகிறது—என்
இதயம் உம்மிடம் இறைஞ்சுது மன்னிப்பை.
தஞ்சம் நீர் பாவியர்க்கு தாயே மறக்காதீர்.
அருள் நிறைந்தமரியாளே அமலனின் அன்னையளே.
பாவி எனக்காக பரிந்து பேசிடுவீர்.
அருமை மகன் மூலம் ஆறுதலை தந்தருளும்
தந்தையின் மன்னிப்பை—தனயன் நான் கொள்ளாது
எப்போதும் உறங்கிவிடேன்.
தினந்தினமாய் இரவினிலே சமாதான இளைப்பாற்றி,
எந்தனுக்கு—
எப்படி இறப்பதென்று இப்பொழுது புரிகிறது.

# நிலை - 14

## கடவுளுக்கு கல்லறை

உங்களுக்காக நான் படும் துன்பங்களில் இப்பொழுது மகிழ்ச்சிகொள்கிறேன். திருச்சபையாகிய தம் உடலின் பொருட்டு கிறிஸ்து படவேண்டிய வேதனைகளில் இன்னும் குறைவாய் இருப்பதை என் உடலில் நிறைவாக்குறேன். (கொலோ. 1 : 24.)

கிறிஸ்துவின் பாடுகள் எங்களில் மிகுந்திருப்பது போல், கிறிஸ்துவின் வழியால் வரும் ஆறுதலும் மிகுந்திருக்கிறது. (2. கொரி. 1 ; 5.)

மறவுங்கள் அனைத்தையும்
மனிதர்களுக் கேளுங்கள்—அவரை
கல்லறைக்குள்ளடக்கி கல்லும் வைத்தாச்சு;
கண்ணீர் வடிக்கிறது அவர் குடும்பம்
கைவிழப்பாய் நினைக்கிறது நண்பர் குழாம்—அவரின்
காலம் கடந்திற்று...... ஆனாலும்

இறைவா! நானறிவேன்—

காலம் முடிவுவரை உந்தனுக்கு
கவலை முடியாது
உன் சிலுவை வழியதனை உலகத்தார்
சுற்றி வருதலினைக் காண்கின்றேன்
உலகத்தார் தம்பயணை எல்லையதை
உண்மையிலே என்று அடைகுவரோ—
உம்முடைய உத்தானம், அன்றேதான் முடிவடையும்
பாதையிலே நிற்கின்றேன்—நின்

பாடுகளில் எனக்குமொரு பங்குண்டு சிறிதளவு.
மற்றவரும்—
தமக்குரிய பங்குகளை தாமேவைத்துள்ளார்
பேரின்பம் தருவதற்காய் நீர் சுமக்கும்
பெரும் சுமையில் நாம் சேர்ந்து பங்கு கொள்வோம்.
அங்கேதான் ஆண்டவரே, அடியேனின்
எல்லையற்ற இரட்சிப்பை எனக்களிக்க
எத்தனையோ வேதனையை நீரடைந்தீர்
தொல்லைகள்—அவற்றினிலே என் வாழ்வில்.
துளிகூட நான் கொண்டதில்லை ஐயா!
கடினமான இந்த வழி வெறுப்பினையே தரும் வேளை
கல்லறைக்கு அண்மையிலே அழைத்தேகும்
வேளையிலே,
கல்லறையின் வாயிலிலே—கடவுளின் மகிமையுடன்
காத்திருப்பீர் எனக்காக என்றறிவேன்

இறைவா!

வாழ்வென்னும் யாத்திரையினிலே—உண்மை
விசுவாசம் என்கின்ற வீதியிலே
நடைபோட உதவிடுவீர்
அனைத்திலுக்கும் மேலாக ஆண்டவரே!
யாத்திரையில் ஈடுபட்ட நானும் சோதரரும்
உள்மனதோடே உமையேற்க உதவிடுவீர்.
மானிட வழிப்பயண வாழ்வினிலே
நானும்மை தொடராமல், நானும்மில் வாழாமல்
வாழ்கின்ற என் வாழ்க்கை—உயிரற்ற உடல் முன்னே
உகுக்கின்ற போலிக்கண்ணீர்க்கு நிகராகும்.



. சுதந்திரன், கொழும்பு - 12